**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**21th ஏப்ரல் / April 2024 ஞா யிறு ஆராதனை**

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. விமலா தனபாலன்**
Call to Worship — Mrs. Vimala Dhanapalan

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. விமலா தனபாலன்**
Prayer — Mrs. Vimala Dhanapalan

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**திவ்ய அன்பின் சத்தத்தை**

*1. திவ்ய,அன்பின் சத்தத்தை ரட்சகா!*
*கேட்டு உம்மை அண்டினேன்*
*இன்னும் கிட்டிச்சேர என்ஆண்டவா!*
*ஆவல் கொண்டிதோ வந்தேன்.*

**இன்னும் கிட்டக் கிட்டச் சேர்த்துக்**
**கொள்ளுமேன்**
**பாடுபட்ட நாயகா**
**இன்னும் கிட்டக் கிட்டச் சேர்த்துக்**
**கொள்ளுமேன்**
**ஜீவன் தந்த ரட்சகா**

*2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்*
*சொந்தமாக்கி கொள்ளுமேன்*
*உம்மை வாஞ்சையோடெந்தன்*
*உள்ளத்தில்*
*நாடித் தேடச் செய்யுமேன்*

*3. திருப்பாதத்தில் தங்கும்*
*போதெல்லாம்*
*பேரானந்தம் காண்கிறேன்*
*உம்மை நோக்கி வேண்டுதல்*
*செய்கையில்*
*மெய்ச் சந்தோஷமாகிறேன்.*

*4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை*
*விண்ணில் பெற்று வாழுவேன்*
*திவ்விய அன்பின் ஆழமும் நீளமும்*
*அங்கே கண்டானந்திப்பேன்*

✝ **மாறி வாசித்தல் 16ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
"சங்கீதம் 42" — Congregation

"என் ஆத்துமா தேவன்மேல் தாகமாயிருக்கிறது"

**Psalter Reading "Psalm 42"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**எக்காளச் சத்தம் வானில் தொனித்திடவே**

**எக்காளச் சத்தம் வானில் தொனித்திடவே**
**எம்இயேசு மா இராஜனே வந்திடுவார்**

*1. அந்த நாள் மிக சமீபமே*
*சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே*
*தேவ எக்காளம் வானில் முழங்க*
*தேவாதி தேவனை சந்திப்போமே*

*2. வானமும் பூமியும் மாறிடினும்*
*வல்லவர் வாக்குதாம் மாறிடாதே*
*தேவதூதர் பாடல் தொனிக்க*
*தேவன் அவரையே தரிசிப்போமே*

*3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்*
*விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்*
*கண்ணீர் கவலை அங்கே இல்லை*
*கர்த்தர் தாமே வெளிச்சமாவார்*

*4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்*
*கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்*
*பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்*
*பரமனோ டென்றும் வாழ்ந்திடுவோம்*

*5. கள்ளர்கள் பரவி அங்கு மிங்கும்*
*கர்த்தரின் வார்த்தையை புரட்டுகின்றார்*
*கர்த்தரே வாரும் வாஞ்சையை தீரும்*
*கருத்துடன் நாம் விழித்திருப்போம்*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திருமதி ஆண்டலின் பினு**
***I கொரிந்தியர் 15 : 35 - 50*** — Mrs. Antalin Binu
Scripture Reading :
**1 Corinthians 15 : 35 - 50**

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

***தேவ சாயல் ஆக மாறி***

**தேவ சாயல் ஆக மாறி**
**தேவனோடிருப்பேன் நானும்**

*1. அந்த நாளும் நெருங்கிடுதே*
*அதிவிரைவாய் நிறைவேறுதே*
*மண்ணின் சாயலை நான் களைந்தே*
*விண்ணவர் சாயல் அடைவேன் - தேவ*

*2. பூமியின் கூடாரம் என்றும்*
*பெலவீனமே அழிந்திடுமே*
*கை வேலை யல்லாத பொன்வீடு*
*கண்டடைந்து வாழ்ந்திடுவேன் – தேவ*

*3. சோரும் உள்ளான மனிதன்*
*சோதனையில் பெலமடைய*
*ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன்*
*ஆண்டவர் என்னோடிருப்பார் – தேவ*

*4. ஆவியின் அச்சார மீந்தார்*
*ஆயத்தமாய் சேர்ந்திடவே*
*ஜீவனே எனது கிறிஸ்தேசு*
*சாவு எந்தன் ஆதாயமே – தேவ*

*5. காத்திருந்து ஜெபிப்பதினால்*
*கழுகு போல பறந்தெழும்பி*
*ஜீவயாத்திரை ஓடி முடித்து*
*ஜீவ க்ரீடம் பெற்றிடுவேன் – தேவ*

**அறிவிப்புகள்**
Announcements

✝ மனப்பாட வசனங்கள் — **சபையார் இணைந்து**
Weekly Memory Verses — Congregation

***I கொரிந்தியர் 15 : 29***
**1 Corinthians 15 : 29**

29. **மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?**

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**